RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) சிவகங்கை அவர்களின்

நடவடிக்கைகள்.

*முன்னிலை: திருமதி. இரா. காவியம் டி.சி.இ.,*

ந.க.எண்: 1826/2018/சிம-4

நாள்:09.04.2018

பொருள்: நகர் ஊரமைப்பு – சிவகங்கை மண்டலம் - சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - ஆ. தெக்கூர் கிராமம் - நில அளவை எண்கள்:271/17, 271/13-இல் 4500.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சாய் மீனாக்ஷி கார்டன்) அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017 மற்றும் 07.11.2017.
4. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.பி3/00393/2018 நாள்:13.02.2018. நாள்:
5. மனுதாரர் திரு.T. மீனாட்சி அவர்களின் விண்ணப்பம் நாள்: 10.02.2018.

******

**உத்தரவு:**

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4 மற்றும் 5-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழக்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம்/ஊராட்சி ஒன்றியம், ஆ. தெக்கூர் கிராமம், நில அளவை எண்கள்:271/17, 271/13-இல் 4500.00சமீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (சாய் மீனாக்ஷி கார்டன்) அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி அம்மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ.வ.மு/நஊதுஇ(சிம)எண்:221/2018 என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in principle approval) வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு | - | 4500.00சமீ (1.11 ஏக்கர்) |
| மொத்த மனைகள் | - | 19 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | - | 05 |
| பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனை | - - | 1 மனையின் பகுதி |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | - | 13 + 1 மனையின் பகுதி |
| பொது ஒதுக்கீடு OSR திறவிடம் | - | 271.01சமீ (10.04%) |

T. Meen

**நிபந்தனைகள்:**

1. பார்வை 1 மற்றும் 2-இல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளபடி மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளில் 18 மனைகளுக்கு மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 18X500=9,000/- (ரூபாய் **ஒன்பதாயிரம்** மட்டும்) கூராய்வு கட்டணம் (Scrutiny Fees) பெறப்பட்டுள்ளது. இதர மனைகளுக்கும் கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக்கொண்டு வரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

2. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

   **Regularisation Charges Head of Account:**
   0217 - Urban Development 60 - Other Urban Development Schemes
   800 - Other receipts AT-Receipt under Regularisation charges of Unapproved layouts and plots DTCP
   **(DPC: 0217-60-800-AT-0007)**

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. தொகைகள் மற்றும் கட்டணங்கள் செலுத்துவதற்கான கேட்பு அறிவிப்பு பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர் கேட்பு அறிவிப்பின்படி கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அனைத்துத் தொகைகள் மற்றும் கட்டணங்களை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் காலதாமத காலத்திற்கு, ஆண்டொன்றுக்கு 6 சதவிகித வட்டி வசூலிக்கப்படும். மேற்சொன்ன கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 90 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகளை உள்ளாட்சி ஏற்றெடுக்க ஊராட்சி சட்ட விதிகளின் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

27



ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

விண்ணப்பத்தாரா் மேற்கொண்டு வட்டார வளா்ச்சி அலுவலா்(கி.ஊ), திருப்பத்தூா் ஊராட்சி ஒன்றியம், சிவக்ஙகை மாவட்டம் அவா்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறாா்.

வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவின் நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு வட்டார வளா்ச்சி அலுவலா்(கி.ஊ), திருப்பத்தூா் ஊராட்சி ஒன்றியம், சிவக்ஙகை மாவட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறாா்.

மேலும், மேற்படி வரன்முறைப்படுத்திய மனைப்பிரிவு வரைபடத்தினை தங்களது அலுவலக விளம்பர பலகையில் பெரிதுபடுத்தி ஒட்டி பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகா் ஊரமைப்பு துணை இயக்குநா் (பொ)
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

இணைப்பு:
1. இரண்டு தொகுப்பு வரைபடங்கள்.
2. அரசு ஆணை எண்: 78 மற்றும் 172-இன் நகல்.

பெறுநா்:
வட்டார வளா்ச்சி அலுவலா்(கி.ஊ),
திருப்பதனூா் ஊராட்சி ஒன்றியம,
சிவக்ஙகை மாவட்டம்

நகல்:
1. நகா் ஊரமைப்பு ஆணையா்,
807, அண்ணாசாலை,
சென்னை – 2 அவா்களுக்கு பணிந்து சமா்ப்பிக்கப்படுகிறது.
2. ஊராட்சிகளின் உதவி இயக்குநா், மாவட்ட ஆட்சியா் அலுவலக வளாகம், சிவகங்கை மாவட்டம். — வரைபடத்துடன்
3. உதவி இயக்குநா், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, சிவகங்கை மாவட்டம். — சாலை மற்றும் பூங்கா(OSR) பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.
4. வட்டாட்சியா், திருப்பத்தூா்.
5. சாா்பதிவாளா், திருப்பத்தூா். — சாலை மற்றும் பூங்கா(OSR) பகுதியினை உள்ளாட்சியின பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.
6. தொழில்நுட்ப வைப்பறை.
7. திருமதி.T. மீனாட்சி,
No.401, திரிசூல் மல்லி அபாா்ட்மென்ட்,
2/2A, இராஜேஸ்வரி நகா்,
நவ இந்தியா,
கோயம்புத்தூா் - 641028.

T. mee

# திருப்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி.நா.சந்திரா

ந.க.பி3 /00393 /2018

நாள்: .06.2018.

பொருள் : மனையிடம் வரன்முறைப்படுத்துதல் - திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - ஆ.தெக்கூர் ஊராட்சி - சர்வே எண் 271/17, 271/13 ல் 4500.00 ச.மீ பரப்பளவில் அமையபெற்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு (சாய்மீனாட்சி கார்டன்)வரைபடம் வரன்முறை செய்து - ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. திருமதி.T.மீனாட்சி, ஆ.தெக்கூர் என்பவரின் மனு
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் ந.க.பி3/00393/18 நாள்: 13.02.2018
5. சிவகங்கை நகர்ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) அவர்களின் ந.க.எண்:1826/2018/சிம-4 நாள்: 09.04.2018.
6. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (3) அறிக்கை நாள்: .06.2018

********

-------

**உத்தரவு:**

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆ.தெக்கூர் ஊராட்சியில் சர்வே எண்: 271/17, 271/13 ல் 4500.00 ச.மீ அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு , பார்வை ஐந்தில் காணும் சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அவர்களின் 09.04.2018ம் தேதிய செயல்முறைகள் ந.க.எண்: 1826/2018/சிம-4 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் பொருட்டு வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசுக் கணக்கிலும் வளர்ச்சிக்கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் தனி அலுவலர், ஆ.தெக்கூர் ஊராட்சி என்ற பெயரில் வங்கி வரைவோலையாக கீழ்கண்ட விபரப்படி இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பிளாட் எண்</th><th>சதுர மீட்டர்</th><th>வரன்முறைக் கட்டணம்</th><th>வளர்ச்சிக் கட்டணம்</th></tr>
<tr><td>1</td><td>1</td><td rowspan="14">2429</td><td rowspan="14">72870</td><td rowspan="14">60725</td></tr>
<tr><td>2</td><td>2</td></tr>
<tr><td>3</td><td>5</td></tr>
<tr><td>4</td><td>7</td></tr>
<tr><td>5</td><td>8</td></tr>
<tr><td>6</td><td>10</td></tr>
<tr><td>7</td><td>11</td></tr>
<tr><td>8</td><td>13</td></tr>
<tr><td>9</td><td>14</td></tr>
<tr><td>10</td><td>15</td></tr>
<tr><td>11</td><td>16</td></tr>
<tr><td>12</td><td>16 (a)</td></tr>
<tr><td>13</td><td>17</td></tr>
<tr><td>14</td><td>18</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>72870</td><td>60725</td></tr>
</table>

மேற்கண்டவாறு வளர்ச்சிக்கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. மனைப்பிரிவின் சாலைகள், பூங்காக்கள் மற்றும் OSR ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் மனைப்பிரிவு கிராம ஊராட்சிக்கு தானமாக பத்திரப்பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

2. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிட வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.

3. சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக் கூடாது.

4. நகர் ஊரமைப்புத்துறை கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

5. மனையிடத்திற்கு இடையே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறின்றி கட்டிடம் கட்டப்படவேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
திருப்பத்தூர்.

பெறுநர்:

திரு.T.மீனாட்சி
1/53 401 திரிசூல் மல்லி அபார்ட்மெண்ட்,
2/2A ராஜேஸ்வரி நகர்,
நவ இந்தியா,
கோயம்புத்தூர்.

நகல்: 1.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (3)
ஊராட்சி ஒன்றிம், திருப்பத்தூர்.

2.ஊராட்சி செயலர்,
ஆ.தெக்கூர் ஊராட்சி